"இந்திய உழவர் முன்னணி" என்ற இயக்கத்தின் நிறுவனர் தலைவர் என்ற முறையில் எங்கள் பாராட்டை பரிவை இங்கு பதிவு செய்கிறேன். தஞ்சை தந்த முனைவர் சுவாமிநாதன் தன் அறிவியல் ஆற்றலால. பசுமைப்புரட்சி நடத்தி இந்தியாவின் பஞ்சத்தைப் பட்டினியை ஒழித்தார். வேளாண்மை தொழிலுக்கு ஊக்கம் தந்து உழவரை தலை நிமிரச் செய்தார். அவருடைய பரிந்துரைகள் ஏற்கப்படாவிடினும் எங்கள் இயக்கம் அவரைக் குருவாக ஏற்று அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும். இதுவே அன்னார் இறுதி நாளில் நாங்கள் ஏற்கும் சூளுரையாகும்.

மு. திருமேனி